# நினைவைப் போற்றுவோம்!



கொஞ்சும் சிரிப்பழகன் கோபத்திலும் சீர் வடிவழகன்!
அஞ்சாமல் தன்கருத்தை அவனியில் உரைத்திடுவோன்!
துஞ்சாமல் தன்பணியை தூய்மையுடன் முடித்திடுவோன்!
கிஞ்சித்தும் கீழ்மையினை ஏற்காத நன்நெறியாளன்!

வஞ்சனை அறியாதோன் வாய்ச்சொல்லில் மயங்காதோன்!
வெஞ்சமர் போல் நெறியாற்றும் வீரமிகு நெறியாளன்!
தஞ்சமென்று யார்மாட்டும் தலைகுனிய அறியாதோன்!
நஞ்சைவயல் நடமிடும் கதிரைப் போல் நண்பருண்டு!

நன்னாளும் பொன்னாளும் எந்நாளும் உடனிருப்பர்!
தன்னிகரில்லா தம்பியைப் போலும் சிலருண்டன்றோ!
மன்னிய அறங்காக்கும் மறுவிலாத் தோழமை மிளிரும்!
இன்றந்த தோழமை தான் எங்கே உனைத் தேடும்?

இனிதான மணவாழ்வில் இல்லாளுக்கு அறம்செய்தான்!
பனிகொஞ்சும் சிரிப்பழகன் பாங்குடைய **இலட்சுமி பதி!**
இனிவாழ்வு வேண்டாமென இறைவன் அழைத்திடவும்,
கனிகொஞ்சும் முகத்தழகன் கனிந்து பறந்தானோ!

கற்றவரும் மற்றவரும் உற்றசீர் நண்பராயிருந்தும்,
உற்றநண்பரின் தவிப்பை உணராது புறப்பட்டானோ!
பற்றோடு என்னிடத்தில் பலநாளில் பேசி நிறைவான்!
பணியாலே அன்பு பூண்ட சிலரிலே இவரும் உண்டு!

பிணியதைச் சேர்த்துவைத்துப் பிரிந்திட வழிசெய்து,
அணியாக இறையவனும் நட்புகொள்ள அழைத்தானோ?
மணியாக எனக்கும் அறிமுகம் செய்த **பிரபாகரன்**,
பிணியிடையே கண்டுவர வகையும் செய்திடவே,

பறக்கும்முன் பார்த்துவிட்ட நிலையும் நிறைக்க,
சிறந்தமகன், சிந்தனையில் நல்லோன் சிலகாலம்,
அறம்செய்ய மண்ணில் வாழ்திருந்தால் மகிழ்வாகும்!
அன்பின்சீர் **இலட்சுமிபதி**யின் நினைவைப் போற்றினேனே!

அன்புடன்,
**கு.ப.அசோகன்**, 19-08-2025
மேனாள் சுங்கத்துறை மதிப்பீடு அதிகாரி.